உ
சிவகுகமயம்.

பன்னிரு திருமுறை
திருப்புகழ் திரட்டு.

வெளியிடுவோர் :
பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி தேவஸ்தானம்
1964
விலை ரு 0–15.

T14628
R005D05
T. 14628

சிவமயம்.

திருக்கோயிலிலே செய்யத்தகாதன.

—(0000000)—

அறம் பிழைத்தார் பொய்த்தார் அருள்சிதைத்தார் மானத்
திறம்பிழைத்தார் தெய்வமிகழ்ந்தார்—புறங்கடையில்
சென்ருர் புகுநரகம் சேர்வாய்கொலென்றழியா
நின்ருள் விதியை நினைந்து. —நளவெண்பா.

ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், எச்சில் உமிழ்தல், மலசலங் கழித்தல், மூக்குநீர் சிந்துதல், பாக்கு வெற்றிலை போடுதல். சுருட்டுப் பிடித்தல், நந்தி பலிபீடம் முதலியன அமைக்கப்பெற்ற உயர்ந்த இடத்திலே உட்காருதல், தூங்குதல், படுத்துக்கொண்டிருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், மயிர் கோதி முடித்தல், சிரசிலே தலைப்பாகை தரித்தல், தோளிலே அங்கவஸ்திரம் போட்டுக்கொள்ளுதல், போர்த்துக்கொள்ளுதல், நிருமாலியத்தை மிதித்தல், வீண்வார்த்தை பேசுதல், சிரித்தல், சண்டையிடுதல், விளையாடுதல், சூதாடுதல், சுவாமி, பலிபீடம், நந்தி, மயில் என்னும் இவைகளுக்குக் குறுக்கே போதல் முதலியனவாம். இத்தகைய செயல்கள் கோயிலின் தூய்மையைக் குறைக்கவும், கோயிலை இழிவு படுத்தவும் ஆகியவை. ஆகையால் அவைகளை ஒருபொழுதும் மறந்தும் செய்யலாகாது. திருக்கோயிலிலே சென்று கடவுளை வழிபடுதலாகிய புண்ணியத்தைத் தேடவந்தவர்கள் அங்கே போய் மேலே காட்டிய குற்றங்களைச் செய்வது குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதற்கொப்பாகும். இங்குக் காட்டிய முறைகளை அன்பர்கள் அனுசரித்து ஆண்டவன் அருளைப் பெறுவார்களாக.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

பன்னிரு திருமுறை

திருப்புகழ் திரட்டு.

விநாயகர் துதி.

இராகம்; நாட்டை.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொல
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

நால்வர் துதி.

இராகம்: நாட்டை,

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்
[போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

இராகம். நாட்டை, பண் நட்டபாடை, திரிஸ்ரஏகதாளம்
அக்ஷரம்–3

1-ம் திருமுறை. திருஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டது.

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதி
[சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

இராகம் நாட்டை. பண் நட்டபாடை, தாளம் திரிஸ்ரஏகம்.
அக்ஷரம்–3

ஈருய்முதல் ஒன்ருய்இரு பெண்ணுண்குண மூன்ருய்
மாருமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆருர்சுவை ஏழோசையோடு எட்டுத்திசை தானுய்
வேருய்உடன் ஆனுன்இடம் வீழிம்மிழலை யே.

இராகம்: காம்போஜி, பண் தக்க ராகம், திரிஸ்ரஏக தாளம்.
அக்ஷரம்–3

பொற்ருளம் பெற்றது.

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ.

இராகம்: ஆரபி, பண் பழந்தக்க ராகம், சதுஸ்ர திருபுடை
அக்ஷரம்–8

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே.

இராம்: காம்போஜி, பண் தக்க ராகம், தாளம் திரிஸ்ரஏகம்.
அக்ஷரம்–3

விதியாய்விளை வாய்விளை வின்பய னுகிக்
கொதியா வருகூற்றை யுதைத்தவர் சேரும்
பதியாவது பங்கய நின்றல ரத்தேன்
பொதியார்பொழில் சூழ்புக லிந்நகர் தானே.

இராகம்; ஆரபி, பண் பழந்தக்க ராகம், தாளம் சதுரஸ்ர
திருபுடை, அக்ஷரம்-8

தாயும்நீயே தந்தைநீயே சங்கரனே அடியேன்
ஆயும்நின்பால் அன்புசெய்வான் ஆதரிக்கின் றதுஉள்ளம்
ஆயம்ஆய காயந்தன்னுள் ஐவர்நின்றுஒன்ற லொட்டார்
மாயமேஎன்று அஞ்சுகின்றேன் வலிவலம் மேயவனே.

இராகம்: காம்போஜி, பண் தக்கேசி, தாளம் திரிஸ்ர திருபுடை அக்ஷரம்-7

பூவார்மலர்கொண்டு அடியார்தொழுவார் புகழ்வார்
வானோர்கள்
மூவார்புரங்கள் எரித்தஅன்று மூவர்க்கருள்செய்தான்
தூமாமழைநின்று அதிரவெருவித்தொறுவின்நிரையோடும்
ஆமாம்பிணைவந்து அணையும்சாரல் அண்ணாமலையாரே.

இராகம்; யதுகுலகாம்போஜி, பண் குறிஞ்சி, திரிஸ்ரதிரு
புடை தாளம் அக்ஷரம்-7

படிக்காசு பெற்றது.

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏச லில்லையே.

இறைவர் ஆயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே.

இராகம்; யதுகுலகாம்போஜி, பண் குறிஞ்சி, திரிஸ்ரதிரு
புடை தாளம் அக்ஷரம்-7

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை யுமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே.

கொலைவரையாத கொள்கையார்தங்கள் மதில்மூன்றும்
சிலைவரையாகச் செற்றனரேனும் சிராப்பள்ளித்
தலைவரைநாளும் தலைவரல்லாமை உரைப்பீர்காள்
நிலவரைநீலம் உண்டதும்வெள்ளை நிறமாமே.

இராகம்: சக்ரவாகம், பண் விழக்குறிஞ்சி, தாளம்
திரிஸ்ரஏகம் அக்ஷரம்–3

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே.
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ ருதிரு நீலகண்டம்

இராகம்: நீலாம்புரி,

புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறி
வழிந்திட் டைமேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேல்என்று அருள்செய்
வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்குந் திரு
வையாறே.

இராகம்: அடாணா, யாழ்முரிப்பண், திரிஸ்ரஏக தாளம்
அக்ஷரம்–3

மாதர்ம டப்பிடியுமட அன்னமு மன்னதோர்
நடையுடைம் மலைமகள் துணையென மகிழ்வர்
பூதஇ னப்படைநின் றிசை பாடவு மாடுவர்

அவர் படர் சடைந் நெடு முடியதோர் புனலர்
வேதமோ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
இரைந் நுரை கரை பொரு துவிம்மி நின் றயலே
தாதவிழ் புன்னைதயங் கும லர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே.

இராகம்: நாதநாமக்கிரியா, பண் இந்தளம், மிஸ்ரசாபு
தாளம், அக்ஷரம் 7

2ம் திருமுறை. **விஷம் தீர்த்தது.**

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே.

இராகம்: நாதநாமக்கிரியா, பண் இந்தளம், திரிஸ்ரதிருபுடை
தாளம் அக்ஷரம்–7

மறைக்கதவம் அடைத்தது

சதுரம் மறைதான் றுதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க வெனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள் ளுங் கருத்தாலே

இராகம்: நாதநாமக்கிரியா, பண் சீகாமரம், கண்டஏகதாளம்
அக்ஷரம்–5

என்பு பெண்ணுக்கியது.

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான்கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்

இராகம்: நவரோஸ், பண் காந்தாரம், திரிஸ்ரஏகதாளம்
அக்ஷரம்–3

பாண்டியன் சுரம் தீர்த்தது.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால வாயான் றிருநீறே

இராகம்: நவரோஸ், பண் பியந்தைக்காந்தாரம்,
திரிஸ்ரதிருபுடை தாளம் அக்ஷரம்–7

கோளறு பதிகம்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்போடாமை இவைமார்பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதோ டொன்றோடேழு பதினெட்டொடாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

இராகம்: நவரோஸ், பண் பியந்தைக்கந்தாராம்,
சதுஸ்ரதிருபுடை தாளம், அக்ஷரம்–8

முத்துப்பல்லக்குப் பெற்றது.

எந்தை ஈசனெம் பெருமான் ஏறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே.

இராகம்: பந்துவராளி, பண் நட்டராகம்,
தாளம் ரூபகம், அக்ஷரம்–3

இன்றுநன்று நாளைநன்று என்றுநின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போது
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல் [மின்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே.

இராகம்: பந்துராவளி, பண் நட்டராகம், தாளம்
சதுஸ்ர திருபுடை, அக்ஷரம்-8

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கடல்
வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.

இராகம்: யதுகுல காம்போதி, பண் செவ்வழி, தாளம்
திரிஸ்ரதிருபுடை, அக்ஷரம்–7

தொண்டர்அஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைக்கட்டி வழிபாடு செய்யும் இடம் என்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீலம் மொட்டலரும் கேதாரமே.

இராகம்: கேதார கௌளை. பண் கந்தாரபஞ்சமம், தாளம்
சதுஸ்ர திருபுடை, அக்ஷரம்-8

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.

இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதி ன்னருள் ஆவடுதுறை அரனே.

பஞ்சாக்கரப் பதிகம்.

இராகம்: கேதார கௌளை, பண் காந்தாரபஞ்சமம்,
தாளம், சதுஸ்ர திருபுடை, அக்ஷரம்-8

துஞ்சலும் துஞ்சலி லாதபோழ்தினும்
நெஞ்சகம் நைந்துநினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.

3-ம் திருமுறை.

இராகம்: நவரோஸ், பண் கொல்லி, மிஸ்ரசாபு தாளம்,
அக்ஷரம் 7

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கி யாதுமோர் குறைவிலை
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

முத்தியளித்தது.

இராம்: பைரவி. பண் கௌசிகம். சதுஸ்ரதிருபுடை அக்ஷ 8

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னும நமச்சி வாயவே.

வைகையாற்றிலிட்ட பாடல்.

இராகம்; பைரவி, பண் கௌசிகம், தாளம், சதுஸ்ர
திருபுடை, அக்ஷரம்—8

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இராகம்; பூபாளம், பண் புறநீர்மை. சதுஸ்ரதிருபுடை
தாளம், அக்ஷரம்—8

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம் மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணி செய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
வாலவா யாவது மிதுவே.

4ம் திருமுறை. திருநாவுக்கரசர் தேவாரம்.

சூலைநோய் நீக்கியது.

இராகம்: நவரோஸ், பண் கொல்லி, சதுஸ்ரதிருபுடை
தாளம், அக்ஷரம்-8

கூற்ருயினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்ரு யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்ரு தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னுமம் என்னுவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யில்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா
னத்துறை அம்மானே.

இராகம்: நவரோஸ், பண் காந்தாரம், திரிஸ்ரஏக தாளம்,
அக்ஷரம்–3

யானையைப் பணிய வைத்தது.

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ்
சுடர்த் திங்கட் சூளா மணியும்
வண்ண வுரிவை யுடையும்
வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறு
மகலம் வளாய வரவும்
திண்ணன் கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர் நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை.

இராகம்: நவரோஸ், பண் காந்தாரம். திஸ்ரஏகதாளம்
அக்ஷரம்–3

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடுப டாமல் ஐயா றடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறி யாதன கண்டேன்.

இராகம்; பந்துவராளி, பண் சாதாரி, திரிஸ்ரஏகதாளம்
அக்ஷரம்–3

திரு அங்கமாலை.

தலையே நீவணங்காய் தலை மாலை தலைக்கணிந்து
தலையா லேபலிதேருந் தலைவனைத் தலையே நீவணங்காய்
கண்காள் காண்மின்களோ கடல் நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பிரான்றன்னைக் கண்காள் காண்மின்களோ

செவிகாள் கேண்மின்களோ சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான்றிற மெப்போதும் செவிகாள்
கேண்மின்களோ

மூக்கே நீ முரலாய் முது காடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கைம ணாளனை மூக்கே நீமுரலாய்

வாயே வாழ்த்து கண்டாய் மத யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை வாயே
வாழ்த்து கண்டாய்

நெஞ்சே நீநினையாய் நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலைமங்கை மணாளனை நெஞ்சே நீநினையாய்

கைகாள் கூப்பித்தொழீர் கடி மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக் கைகாள் கூப்பித்
தொழீர்

ஆக்கை யாற் பயனென் னரன் கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றியென் னாதவிவ் வாக்கையாற்
பயனென்

கால்க ளாற்பயனென் கறைக் கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக் கால்க
ளாற்பயனென்

உற்றா ராருளரோ வுயிர் கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல்லா னமக் குற்றா ராருளரோ

இறுமாந் திருப்பன்கொலோ வீசன் பல்கணத்
தெண்ணப்பட்டுச்

சிறுமா னேந்தி தன் சேவடிக் கீழ்ச்சென்று
இறுமாந்திருப்பன்கொலோ

தேடிக் கண்டுகொண்டேன் றிரு மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே தேடிக்
கண்டுகொண்டேன்

இராகம்: கேதார கௌள, பண் காந்தாரபஞ்சமம்,
தாளம், சதுஸ்ர திருபுடை, அக்ஷரம்-8

கல்லைத் தெப்பமாகக்கொண்டு கடலைக் கடந்தது.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

திருநேரிசை, *திருஒற்றியூர்,*

ஓம்பினேன் கூட்டை வாளா உள்ளத்தோர் கொடுமை வைத்துக்
காம்பிலா மூழை போலக் கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின்வாய்த் தேரை போலப் பலபல நினைக்கின்றேனை
ஓம்பிநீ உய்யக் கொள்ளாய்ஒற்றியூ ருடைய கோவே.

மனமெனும் தோணிபற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணாது
உனையுனும் உணர்வை நல்கா யொற்றியூருடைய கோவே

தனித்திருநேரிசை.

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை
வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும்
நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில் சிவகதி விளையுமன்றே.

காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே.

இராகம்: பைரவி, திருவிருத்தம்.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டு மிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற் கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்
ணனே

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் னுள்ளமு நானுங் கிடந்தலந் தெய்த்தொழிந்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவா ரூரா [தேன்
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்
ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

படைக்கல மாகவுன் ஞமத் தெழுத்தஞ்சுஎன் நாவிற்
கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப் பும்உனக்கு ஆட்செய்
கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்தூ நீறு
அணிந்து உன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்றம் பலத்துஅரனே

5-ம் திருமுறை.

இராகம்: பூர்வகல்யாணி, திருக்குறுந்தொகை,
மிஸ்ரசாபு தாளம்

மறைக்கதவு திறந்தது.

பண்ணி னேர் மொழி யாளுமை பங்கரோ
மண்ணி ஞர் வலஞ் செய் மறைக் காடரோ
கண்ணி ஞலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே

நீற்றறையைக் குளிரச் செய்தது.

மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

கனியி னும்கட்டி பட்டக ரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல்லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே.

6ம் திருமுறை

இராம்: ஹரிகாம்போஜி. திருத்தாண்டகம்.

எல்லா வுலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச் சேவடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே.

இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
　　இயமான னாய்எறியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
　　ஆகாச மாய்அட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
　　பிறர்உருவும் தம்உருவும் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
　　நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே.

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
　　அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
　　ஒருகுலமும் சுற்றமும் ஓரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
　　துணையாய்என் நெஞ்சம் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
　　இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான சங்கரன்
நற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

சுந்தரமூர்த்திநாயனார் திருவருள்பெற்றது.

இராகம்: நாதநாமக்ரியா, பண்: இந்தளம், திரிஸ்ரஏகதாளம் அக்ஷரம்–3

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் களாயினி யல்லேனென லாமே.

இராகம்: நவரோஸ், பண் கொல்லிக்கௌவாணம், கண்டசாபு தாளம், அக்ஷரம்–5

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென்முல்லை யந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

இராகம்: நவரோஸ், பண் கொல்லி, திரிஸ்ர, ஏக தாளம்
அக்ஷரம்–3

பொன் பெற்றது.

தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தருஞ் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள் வதற்கு
யாதுமையுற வில்லையே.

இராகம்; சங்கராபரணம், பண். பழம்பஞ்சுரம் மிஸ்ரஏக–
தாளம் கூக்ஷரம்–7

மற்றுப்பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லும் நாநமச்சிவாயவே.

இராகம்; பந்துவராளி. பண், நட்டராகம், திரிஸ்ரஏகதாளம்
அக்ஷரம்–3

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்த
மன்னே மாமணியே மழபாடியுண் மாணிக்கமே [வனே
அன்னே யுன்னையல்லால் இனியாரை நினைக்கேனே

இராகம்: காம்போஜி, பண், தக்கேசி. சதுஸ்ரதிருபுடை
அக்ஷரம்–8

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானை
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணு
எம்மா னையெளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலும் ஆமே.

8ம் திருமுறை. மாணிக்கவாசகர். திருவாசகம்

இராகம்: மோஹனம், சதுஸ்ரதிருபுடை, அக்ஷரம்–8

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி யெளியையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந்
தொடக்கெலா மறுத்தநற் சோதி
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்
திருப்பெருந் துறையுறை சிவனே [றும்
ஒன்றும்நீ யல்லை யன்றிஒன் றில்லை
ஆருன்னை யறியகிற் பாரே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையேஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருபெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.

இராகம்: மோஹனம், கண்டசாபு தாளம் அக்ஷரம்–5

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

இராகம்: பைரவி, கலிவிருத்தம்.

திருக்கோவையார்.

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்துமென் சிந்தை
யுள்ளும்
உறைவான் உயர்மதிற்கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ வன்றியேழிசைச் சூழல்புக்கோ
இறைவாதடவரைத் தோட்கென்கொலாம்புகுந் தெய்தியதே

இராகம்: சக்ரவாகம், 9ம் திருமுறை, சதுஸ்ர திருபுடை,
அக்ஷரம்–8

சேந்தனர் திருவிசைப்பா.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ்சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரவென் கண் குளிர்ந் தனவே.

இராகம்: ஆனந்தபைரவி,

சேந்தனுர் திருப்பல்லாண்டு.

பாலுக்குப் பாலகன்வேண்டியழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம்பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

10ம் திருமுறை. **திருமூலர் திருமந்திரம்.**

இராகம்: ஹிந்தோளம், சதுஸ்ரதிருபுடை அக்ஷரம்–8

அன்புஞ்சிவமும் இரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயிற் பகவற்கு அதாமே.

அகர மாயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரம் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரில்லை யென்பது நிச்சயந்தானே.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி இல்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

என்பே விறகா இறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணுதே.

11-ம் திருமுறை.

காரைக்கால் அம்மையார்.

அற்புதத் திருவந்தாதி.

இராகம்: நெஞ்சுருட்டி. திரிஸ்ர ஏகதாளம், அக்ஷரம்—3

அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்
அருளே பிறப்பறுப்பது ஆனல் — அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவது எனக்கு,

அன்றுந் திருவுருவங் காணுதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் —என்றுந்தான்
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட்கு என்னு
எவ்வுருவோ நின் உருவம் ஏது.]ரைக்கேன்

12-ம் திருமுறை.

சேக்கிழார் பெரிய புராணம்.

இராகம்: மத்யமாவதி மிஸ்ரசாபு தாளம், அக்ஷரம்–7

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத்து விகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

சென்றகாலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்றெழுந்தருளப் பெற்ற பேறிதனுல்
எற்றைக்கும் திருவருள் உடையேம்
நன்றியில்நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்றுஒளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்தன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைமலர் உச்சிமேல் குவித்துப்
பண்ணினுல் நீடி அறிவரும் பதிகம்
பாடினர் பரவினர் பணிந்தார்.

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னுல்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாம்எனில் உலகர்முன் தருகென உரைப்பார்

மூவேந்தர் தமிழ்வழங்கும் நாட்டுக் கப்பால்
முதல்வனூர் அடிச்சார்ந்த முறைமை யோரும்
நாவேய்ந்த திருத்தொண்ட த்தொகையிற் கூறும்
நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடைமேல் அடம்பு தும்பை
புதியமதி நதிஇதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியான் அடிச்சார்ந் தாரும்
செப்பியஅப் பாலும்அடிச் சார்ந்தார் தாமே.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினுல்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளா ரடி யார்அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

திருப்புகழ். அருணகிரிநாதர்.

இராகம்: ஆனந்தபைரவி சதுஸ்ரதிருபுடை, அக்ஷரம்–8

உம்பர்தரு தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

இராகம்: செஞ்சுருட்டி. சதுஸ்ரதிருபுடை தாளம், அக்ஷரம்–8

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

இராகம்: மோஹனம். கண்டசாபு தாளம், அக்ஷரம்–5

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசலம மர்ந்த பெருமாளே.

இராகம்: சிம்ஹேந்திரமத்யமம், சதுஸ்ரதிருபுடை தாளம்
அக்ஷரம்—8

அகரமு மாகி அதிபனு மாகி அதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி அவர்மே
லாய்
இகரமு மாகி எவைகளு மாகி இனிமையு மாகி வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ எனதுமுன் னோடி
வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேடன் அருளிய பூஜை மகிழ்கதிர் காமம்
உடையோனே
செககண சேகுத் தகுதிமி தோதி திமியெனவாடும்
மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவும்
பெருமாளே.

இராகம்: சக்ரவாகம் கண்டஜம்பை தாளம், அக்ஷரம்—8

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான்நி னைந்தருள் பெறுவேனே
இபமாமு கன்றனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா
செபமாலை தந்த சற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

இராகம்: தோடி சங்கீர்ண ஜம்பை தாளம், அக்ஷரம்—12

ஒருபொழுது மிருசரண நேசத்தேவைத் துணரேனே
உனதுபழ னிமலையெனு மூரைச்சேவித் தறியேனே
பெருபுவியி லுயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே
பிறவியற நினைகுவனென் னாசைப்பாடைத் தவிரேனே
துரிதமிடு நிருதர்புர சூறைக்காரப் பெருமாளே
தொழுது வழி படுமடியர் காவற் காரப் பெருமாளே
விருதுகவி விதரணவி நோதக் காரப் பெருமாளே
விறன்மறவர் சிறுமிதிரு வேளைக் காரப் பெருமாளே

இராகம்: சரஸ்வதி. சதுஸ்ரதிருபுடை, அக்ஷரம்–8

கலைமேவு ஞானப் பிரகாசக்
கடலாடி ஆசைக் கடலேறி
பலமாய வாதிற் பிறழாதே
பதிஞான வாழ்வைத் தருவாயே
மலைமேவு மாயக் குறமாதின்
மணமேவும் வாலக் குமரேசா
சிலைவேட சேவற் கொடியோனே
திருவால வாயிற் பெருமாளே.

இராகம்: நவரோஸ், சதுஸ்ரதிருபுடை, அக்ஷரம்–8

நாத விந்துக லாதீந மோநம வேதமந்த்ரசொ ரூபாந மோநம
ஞானபண்டித சாமீந மோநம வெகுகோடி
நாம சம்புகு மாராந மோநம போக அந்தரி பாலாந மோநம
நாக பந்தம யூராந மோநம பரசூரர்
சேத தண்டவி நோதாந மோநம கீத கிண்கிணி பாதா
ந மோநம
தீர சம்ப்ரம வீராந மோநம கிரிராஜ
தீப மங்கள சோதீந மோநம தூய அம்பல லீலாந மோநம
தேவ குஞ்சரி பாகாந மோநம அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூசையும் ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையும் மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை சோழ மண்டல மீதேம
னோகர
ராஜ கெம்பீர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயில் ஆரூரர் தோழமை சேர்தல் கொண்டவ
ரோடே முன்னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மா கயிலையிலேகி
ஆதி யந்தவு லாவாசு பாடிய சேரர் கொங்குவை காவூர்
நனாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

இராகம்: மோஹனம் தாளம் கண்டஜம்பை, அக்ஷரம்-5

சிவனார்ம னங்குளிர வுபதேச மந்திரம்இரு
செவிமீதி லும்பகர்செய் குருநாதா
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
செயலேவி ரும்பியுளம் நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதாவ லைந்துழலும்
அடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான தும்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே
நவநீத மும்திருடி உரலோடே ஒன்றுமரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவலோக மும்கைதொழும் நிஜதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு விளைகோவே
தெவயானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக
செகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே

இராகம்: ஆனந்தபைரவி. தாளம் கண்டஜம்பை, அக்ஷரம்-5

சரணகம லாலயத்தை அரைநிமிட நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்கம் உறுவேனோ
கருணைபுரி யாதிருப்பது எனகுறைஇவ் வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய, மீதிரத்ன மணி,யணிபொன் மாலை,செச்சை
கமழுமண மார்கடப்பம் அணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ,யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞான,முத்தி,பரகதியும்,நீகொடுத்து
உதவிபுரிய வேணும்நெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்மம் அதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம்அ னேகமுற்ற பழனிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே.

இராகம்: கானடா, தாளம் கண்டஜம்பை, அக்ஷரம்–5

அவனிதனிலே பிறந்து மதலையென வேதவழ்ந்து
அழகுபெற வேநடந்து இளையோனய்
அருமழலை யேமிகுந்து குதலைமொழி யேபுகன்று
அதிவிதம தாய்வளர்ந்து பதினருய்
சிவகலைகள் ஆகமங்கள் மிகவும்மறை யோதும்அன்பர்
திருவடிக ளேநினைந்து துதியாமல்
தெரிவையர்கள் ஆசைமிஞ்சி வெகுகவலை யாயுழன்று
திரியுமடி யேனையுன்றன் அடிசேராய்
மவுனவுப தேசசம்பு மதியறுகு வேணிதும்பை
மணிமுடியின் மீதணிந்த மஹாதேவர்
மனமகிழ வேயணைந்து ஒருபுறம தாகவந்த
மலைமகள்கு மாரதுங்க வடிவேலா
பவனிவர வேயுகந்து மயிலின்மிசை யேதிகழ்ந்து
படியதிர வேநடந்த கழல்வீரா
பரமபத மேசெறிந்த முருகனென வேயுகந்து
பழனிமலை மேலமர்ந்த பெருமாளே.

இராகம்: சாரங்க, தாளம் கண்டஜம்பை, அக்ஷரம்–5

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்றுநாளும்
ஏறுமயில் வாகனகு காசரவ ணைனது
ஈசஎன மானமுனது என்றுமோதும்
ஏழைகள்வி யாகுலம்இ தேதெனவி னுவில்உனை
ஏவர்புகழ் வார்மறையும் என்சொலாதோ
நீறுபடும் மாழைபொரு மேனியவ வேலஅணி
நீலமயில் வாகவுமை தந்தவேளே
நீசர்கள்தம மோடெனது தீவினையெ லாம்மடிய
நீடுதனி வேல்விடும் மடங்கல்வேலா
சீறிவரும் மாறவுணன் ஆவியுணும் ஆனமுக
தேவர்துணை வாசிகரி அண்டகூடம்
சேரும்அழ கார்பழனி வாழ்கு மரனேபிரம
தேவர்வர தாமுருக தம்பிரானே.

இராகம்: சகானு, தாளம் கண்டஜம்பை அக்ஷரம்-5

கருவினுரு வாகிவந்து வயதளவி லேவளர்ந்து
கலைகள்பல வேதெரிந்து மதனாலே
கரியகுழல் மாதர்தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி
அரகரசி வாயவென்று தினமும்நினை யாமல்நின்று
அறுசமய நீதிஒன்றும் அறியாமல்
அசனமிடு வார்கள்தங்கள் மனைகள்தலை வாசல்நின்று
அனுதினமும் நாணமின்றி அழிவேனோ
உரகபடம் மேல்வளர்ந்த பெரியபெரு மாளரங்கர்
உலகளவு மால்மகிழ்ந்த மருகோனே
உபயகுல தீபதுங்க விருதுகவி ராசசிங்க
உறைபுகலி யூரில்அன்று வருவோனே
பரவைமனை மீதில்அன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனரு ளால்வளர்ந்த குமரேசா
பகைஅசுரர் சேனைகொன்று அமரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதில்நின்ற பெருமாளே.

இராகம்: பிலஹரி, கண்டஜாதி ஜம்பைதாளம், அக்ஷரம்-8

பிறவிஅலை யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதிகுரு வாக்கியப் பொருளாலே
உனதுபத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.

இராகம்: வராளி, சதுஸ்ரதிருபுடை, அக்ஷரம்—8

நீலங்கொள் மேகத்தின் மயின்மீதே
நீவந்த வாழ்வைக் கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத் தந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்கும் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே.

இராகம்: பந்துவராளி, சதுஸ்ரதிருபுடை, அக்ஷரம்—8

வசனமிக வேற்றி மறவாதே
மனதுதுய ராற்றில் உழலாதே
இசைபயில் சடாக்ஷ ரமதாலே
இகபரசெள பாக்கியம் அருள்வாயே
பசுபதிசி வாக்கியம் உணர்வோனே
பழனிமலை வீற்ற ருளும் வேலா
அசுரர்கிளை வாட்டி மிக வாழ
அமரர்சிறை மீட்ட பெருமாளே.

இராகம்: ஷண்முகப்ரியா, சதுஸ்ரஜாதி திருபுடை,
அக்ஷரம்—8

வரதா மணிநீ எனவோரில்
வருகா தெதுதான் அதில்வாராது
இரதா திகளால் நவலோகம்
இடவே கரியாம் இதிலேது
சரதா மறையோ தயன்மாலும்
சகலா கமநூல் அறியாத
பரதே வதையாள் தருசேயே
பழனு புரிவாழ் பெருமாளே.

இராகம்: சுரட்டி, கண்டஜாதி திருபுடை தாளம் அக்ஷரம்-8

உலகபசு பாச தொந்த மதுவான
உறவுகிளை தாயர் தந்தை மனைபாலர்
மலசலசு வாச சஞ்சல மதாலென்
மதிநிலைகெ டாமல் உன்றனருள் தாராய்
சலமறுகு பூளை தும்பையணி சேயே
சரவணப வாமுகுந்தன் மருகோனே
பலகலைசி வாகமங்கள் பயில்வோனே
பழனிமலை வாழவந்த பெருமாளே.

கந்தர் அலங்காரம்.

இராகம்: பைரவி விருத்தம்

மாலோன் மருகனை மன்றுடி மைந்தனை வானவர்க்கும்
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழில் செங்கோடனைச் சென்று கண்டு [தொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான் முகனே.

அனுபூதி.

இராகம்: கானடா, சதுஸ்ரதிருபுடை அக்ஷரம்-8

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவில்
சாடுந் தனியா னைசகோ தரனே.

அநுபூதி.

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகும் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவஎண் குணபஞ் சரனே .

எந்தா யுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

கந்தர் அலங்காரம்.

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு தும்கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியாற்கு நல்ல பெருமாள் அவுணர்கு லம்அடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே.

படிக்கின் றிலைபழ னித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காஎன் கிலைமுசியாமல்இட்டு
மிடிக்கின் றிலைபரமானந்த ம்மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேதுநமக்குஇனியே.

சூடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தான மென்றும்
இடுங்கோள் இருந்தபடி இருங் கோள்எழு பாரும்உய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத்துளைக்கவைவேல்
விடுங்கோன் அருள்வந்து தானே உமக்கு வெளிப்படுமே.

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம் போல்
கைதான் இருப துடையான் தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே.

இராகம்: மத்தியமாவதி. விருத்தம்

கந்தபுராணம்—கச்சியப்பர்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்கச் செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியார் எல்லாம்.

தெய்வயானை

திருச்சிற்றம்பலம்.

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
4	5	விாழக்குறிஞ்சி	வியாழக்குறிஞ்சி
7	1	பியந்தைக்கந்தாராம்	பியந்தைக்காந்தாரம்
9	2	இராம்	இராகம்
16	6	இராம்	இராகம்
24	12	நெஞ்சுருட்டி	செஞ்சுருட்டி

பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம்

மலைக்கோயில் காரியாலயத்தில் கட்டவேண்டிய கட்டணங்களின் விபரம்.

		ரூ. ந.பை
1.	ரூ. 1 முதல் ரூ. 20 வரை பெறுமான பஞ்சாமிர்த அபிஷேகம் செய்ய	2—25
2.	ரூ. 21 முதல் ரூ 100 வரை பெறுமான பஞ்சாமிர்த அபிஷேகம் செய்ய	3—25
3.	ரூ. 100-க்குமேல் பெறுமான பஞ்சாமிர்த அபிஷேகம் செய்ய	6—25
4.	பஞ்சாமிர்த அபிஷேகம் சொர்ண புஷ்பம்	1—00
5.	சந்தனம் விபூதி அபிஷேகம்செய்ய	1—00
6.	ஷ அபிஷேகம் செய்ய சொர்ண புஷ்பம்	0—25
7	சகஸ்ரநாமம் அர்ச்சனை 1-க்கு	1—50
8.	அஷ்டோத்திர அர்ச்சனை 1-க்கு	0—40
9.	இராஜ அலங்காரம்	3—00
10.	வேட அலங்காரம்	3—00
11.	சாத்துப்படி பரிவட்டம்	0—25
12.	அலங்கார பரிவட்டம்	1—00
13.	கலியாண காணிக்கை	1—25
14.	தீர்த்தக் காணிக்கை	1—25
15.	திருவிளக்குக் காணிக்கை	1—25
16.	சத்திய காணிக்கை	1—25
17	சூலக் காணிக்கை	0—25
18.	காவடி 1-க்கு	0—25

உபய அபிஷேகங்களுக்கு உபயோகப்படுத்தும் கௌபீனம் 1-க்கு 0—15 ந. பை. செலுத்த வேண்டும்.

தங்கக் கவச சாத்துப்படி ஒவ்வொரு கிருத்திகை தோறும் மற்றும் விசேஷங்கள் தோறும் ஆண்டவருக்கு தேவஸ்தானத்தாரால் சாத்தப்பெறும்.

மலைக்கோயில் பூசா காலங்கள்

1.	திருவனந்தல் (விஸ்வரூப தரிசனம்)	காலை	6 மணி
2.	முதல் காலை விழா பூசை	,,	$7\frac{1}{4}$,,
3.	சிறுகாலை சந்தி பூசை	,,	8 ,,
4	காலை சந்தி பூசை	,,	9 ,,
5.	உச்சிக்காலம் பூசை	நடுப்பகல்	12 ,,
6.	சாயரட்சை பூசை	மாலை	6 ,,
7.	அர்த்த சாமம் பூசை	இரவு	8 ,,

யாத்திரிகர்களுக்குரிய குறிப்புக்கள்.

1. பழனி தென் இந்திய இருப்புப்பாதை வழியில், சென்னையினின்றும் திண்டுககல் - கோயமுத்தூர்க் கிளை வழியில், திண்டுக்கல்லிலிருந்து 36 மைலிலுள்ளது. தினம் திண்டுக்கல் - பொள்ளாச்சி கோயமுத்தூர் வழியாக பழனிக்கு ஐந்து வண்டித் தொடர்கள் போக்கு வரத்து உண்டு.

2. பழனி ரயில் நிலையத்தில், ஏராளமான ஜட்கா, மாட்டு வண்டிகள் மலையடிவாரத்திற்கும் ஊருக்கும், சண்முக நதிக்கரைக்கும் போகவரக் கிடைக்கும். ரயிலடியிலிருந்து மலையடிவாரமும் ஊர்க்கோயிலும் 1 மைல்; சண்முகநதி 2 மைல்.

3. ரயில் நிலையத்திலிருந்து மலையடிவாரம் போகும் சாலையின் நடு பாகத்தில் யாத்ரிகர்கள் தங்க எல்லா வசதிகளுடன் கூடி தேவஸ்தான சத்திரம் ஒன்று சுமார் 4 லக்ஷ ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிறது.

4. மலையிலும் ஊர்க்கோயிலிலும் தரிசனம் காவடி முதலிய பிரார்த்தனைகளைக் கூடவிருந்து செய்துவைக்கவும் அயன் பண்டாரங்கள் என்ற ஒரு தொகையினர் இருக்கின்றனர்.

5. இவை தவிர தேவஸ்தானத்தாரின் உதவி வேண்டும்போது கிடைக்கும். தேவஸ்தானத்தாரால் அபிஷேகம் செய்ய சுத்தமான பன்னீர், மலைக் கோயிலுக்குப் போகும் முதல் மண்டபத்தில் விலைக்குக் கொடுக்கப்படுகிறது.

இராதாகிருஷ்ண அச்சகம், பழனி